# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

### Calendar Case No. 01 of 2024

**Deposition of witness for** : **PW18**

**Name** : **Dr.தேவிரோஸ்ட்**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th April - 2026

எதிரிகள் 1, 2,4 மற்றும் 7 ஆஜர் 3,5,6 எதிரிகள் ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் அரவிந்த் கண் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2022 ன் தேதியில் முனியம்மாள் க/பெ திருப்பதி என்பவர் வலது கண்ணில் அடிபட்டு இருந்ததாக சிகிச்சைக்காக வந்தார். அவர் வந்தபோது பார்வை பரிசோதித்த போது மிகவும் குறைவாக இருந்தது. அவரை கண் பரிசோதித்த போது அவருக்கு ஏற்கனவே கருவிழி சிகிச்சை செய்தபோது போடப்பட்ட தையல்கள் போடப்பட்டிருந்த காயங்கள் பிரிந்து இருந்தது.

அப்போது நரம்பிலும் வீக்கம் இருந்தது. அன்றைய தினமே நாங்கள் அவருக்கு கண் அறுவை சிகிச்சை செய்தோம். ஏற்கனவே தையல் பிரிந்த காயத்திற்கு தையல் போட்டோம். மறுநாள் பரிசோதித்த போது தையல் போடப்பட்டிருந்த பகுதி மூடி இருந்தது. நரம்பு Vitreous பகுதியில் ரத்தக் கசிவு இருந்தது. மேற்படி காயம் ஆறுவதற்காக மருந்துகள் கொடுத்தோம் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்து விடுவிப்பு செய்யப்பட்டது. எங்களிடம் சிகிச்சைக்கு வந்த நாளுக்கும் முந்தைய நாள் காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையில் 3:00 மணி அளவில் முனியம்மாளின் சகோதரர் மற்றும் உறவினர்களுக்கும் சண்டை நடந்த போது அதை முனியம்மாள் தடுக்க சென்றபோது அவரது கண்ணில் அடிபட்டு விட்டதாக சொன்னார். அடிப்பட்டபோது அவரது கண்ணில் ரத்தம் மற்றும் நீர் வடிந்ததாக சொன்னார். அவ்வாறு அடிபட்ட போது சுமார் ஐந்து நிமிடம் சுயநினைவு இல்லாமல் இருந்ததாகவும் சொன்னார். வலி மற்றும் பார்வை குறைபாடும் சொன்னார். பின்பு கண் பரிசோதனைக்காக சுமார் இரண்டு மாதங்கள் தொடர்ந்து வந்தார். பரிசோதித்த போது அவருக்கு நரம்பில் ஏற்பட்ட ரத்த கசிவுகள் சரியாகிவிட்டது. பின்பு பார்வைக்கு லென்ஸ் வைத்தால் சரியாக இருக்கும் என சொன்னதால் நவம்பர் 21ம் தேதி வந்து லென்ஸ் அறுவை சிகிச்சை செய்து வைத்துக் கொண்டார்கள். பின்பு இரண்டு முறை பரிசோதனைக்காக வந்தார் டிசம்பர் மாதத்தில் கண் அறுவை சிகிச்சை முன்னேற்றம் காணப்பட்டு கண்ணாடி அணிவிக்கப்பட்டு படிக்கும் அளவிற்கு வந்துவிட்டார். பார்வை அல்லாமல் ஓரளவு படிக்கும் அளவிற்கு வந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் விடுவிப்பு சான்று மேற்படி முனியம்மாளுக்கு எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டது . அது அ.சா.ஆ. 24 ஆகும்.

குறுக்கு விசாரணை

எங்களிடம் சிகிச்சைக்கு வருவது முன்பே அவருக்கு கண் பார்வை பிரச்சனை இருந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பே அவருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முனியம்மாவிற்கு மேற்படி கண்ணில் ஏற்பட்ட காயம் எவ்வாறு அடிபட்டது என்பது குறிப்பிட்டு சொல்ல முடியாது

என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் சென்று கூர்மையான கற்கள் உள்ள பகுதியில் விழுந்தால் மேற்படி கண்ணில் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.